# செம்மங்குடி ஸ்ரீ மஹாமாரியம்மன் கோவில்



நமது கிராமங்களில் உள்ள கோவில்களை மத்யமா சமாஜம் பராமரிப்பது பற்றிய பல கருத்துக்கள் நமது வாத்திமா Yahoo Group மற்றும் Facebook Vathima Globalலில் வந்து கொண்டிருக்கிறது. ஒரு சில கிராமங்களில் அந்த அந்த கிராமவாசிகளே பராமரித்து வருவது பற்றிய செய்திகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள சில மெம்பர்களை அணுகினோம்.

முதலாவதாக, இந்த இதழில், செம்மங்குடியில் உள்ள ஸ்ரீ மஹா மாரியம்மன் கோவில் செம்மங்குடி SSN Family பராமரித்து வருவது பற்றி நமது உப தலைவரும், SSN Family சேர்ந்தவருமான V. சங்கர் (PM125) எழுதுகிறார்:

கோவிலைப் பற்றி ஒரு முக்கிய குறிப்பு: செம்மங்குடியில் உள்ள ஸ்ரீ மஹா மாரியம்மன் கோவிலுக்கும் காஞ்சி மடத்திற்கும் ஸ்ரீ மஹா சுவாமிகளுடைய நாட்களிலிருந்து, எழுபது ஆண்டுகளுக்கு மேல், தொடர்பு இருந்திருக்கின்றது. இது பற்றிய விவரம் சச்சு மாமி (நமது அங்கத்திர் ஆந்ததாண்டவபுரம் ஸ்ரீ R. பாலசுப்ரமணியன், LM493 அவர்களுடைய தாயார்) மூலம் இது பற்றி கோவிலில் 2011ல் கும்பாபிகேகத்தின் பொழுது ஒரு கல்வெட்டு வைப்பதற்காக ஆராய்ச்சி செய்யும் போது அறிந்தேன்.

சச்சு மாமி செம்மங்குடியில் உள்ள மாடியாம் எனப்படும் ஸ்ரீ சுந்தரேஸ்வர அய்யர்

அவர்களது புதல்வி. சச்சு மாமிக்கு அப்பொழுது 10 வயது இருக்கும். காஞ்சி ஸ்ரீ மஹா பெரியவர் செம்மங்குடியில் முகாம் இட்டிருந்தார். அங்கிருந்து அருகிலுள்ள காட்டூர் கிராமம் கிளம்பும் பொழுது, திடீரென்று மஹா ஸ்வாமிகளுக்கு பார்வை பறிபோனது. அங்கிருந்த ஸ்ரீ நடேச அய்யர் (எனது தாத்தா) பதறிப்போய், ஸ்ரீ மகாமாரியம்மன் வேண்டியவுடனேயே, மறுபடியும் பார்வையை திரும்ப பெற்றார்.

ஒரு சில வாரங்கள் ஸ்ரீசுந்தரேஸ்வர அய்யர் வீட்டு மாட்டு கொட்டிலில் இருந்து பூரண நலம் பெற்றார். இது நடந்தது 1939 வைகாசி மாதம் (June1939). இதனை மிகவும் உணர்சிபூர்வமாக சச்சு மாமி என்னிடம் விவரித்த பொழுது மெய்சிலிர்ந்தது. பல வருடங்களுக்கு முன் காஞ்சி மடத்திலிருந்து கண் மலர் சார்த்தப்பட்டது. இதனைப் பற்றிய கல்வெட்டு ஸ்ரீ பாலபெரியவா, ஸ்ரீ சங்கர விஜயேந்திர சுவாமிகளுடைய அனுமதியுடன் அமைத்துள்ளோம்.

ஒவ்வொரு தலைமுறையிலும் சிறப்பாக கும்பாபிசேகம் செய்து வரும் இக்கோவிலில், September 2011யில் கிராமவாசிகளுடைய பேராதரவுடன் மிகவும் சிறப்பாக கும்பாபிசேகம்

நடைபெற்றது. இக்கோவிலுக்கு உள்ள நிதியிலிருந்து கோவிலுக்கு மாதா மாதம் தேவையான பூசாரி சம்பளம், மின் செலவு, பராமரிப்பு ஆகியவற்றை பூர்திசெய்கிறோம்.



செம்மங்குடியில் வசிக்கும் மணி மற்றும் அவரது மனைவி சித்ரா உதவி புரிகின்றார்கள். இதற்கான செலவு மாதம் ரூ.1000 – 1500.

இக்கோவில், செம்மங்குடி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்து சென்னை மற்றும் வெளியூர்களில் வசிக்கும் பல குடும்பங்கலுக்கு குலதெய்வமாக விளங்குகிறது. இதனால் பலரும் உதவி புரிகின்றனர்.

மேலும் கோவிலுக்காக ஒரு டிரஸ்ட் நிறுவி ஆண்டு நிகழ்சிகள் மற்றும் இங்கு வெளியூர் பக்தர்கள் தங்குவதற்கு வசதி, நிகழ்ச்சிகள் நடத்த ஒரு மண்டபம் ஆகியவற்றிற்கு முயற்சி செய்கிறோம்.



படத்தில் SSN Familyயை சேர்ந்தவரும் நமது அங்கத்தினருமான S.V. Ramamurthy (LM051).

படத்தில் செம்மங்குடி ஸ்ரீமஹாமாரியம்மன் கோவில் பூசாரி திரு.குமரேசன் மற்றும் திரு.மணி.

**கோவில் தொடர்புக்கு : 9578397746.**